# விலைமனுக்கோரல்களுக்கான விண்ணப்பம்

## மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

## சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)

# வன பீட் (Beat) அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம்

1. சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை சனநாயக குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை இணைப்பின் பிரகாரம் வன பாதுகாப்பு திணைக்களத்தின் 10 வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் (அனுராதபுரம், மாத்தளை, முல்லைத்தீவு, திருகோணமலை, இரத்தினபுரி, பொலன்னறுவை மற்றும் மாத்தறை மாவட்டங்கள்) நிர்மாணத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

2. இணைப்பின் பிரகாரம், வன பாதுகாப்பு திணைக்களத்திற்காக வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணத்திற்காக மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரார்களிடமிருந்து விலைமனுக்கோரல்களை இப்போது கோருகின்றார். பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் கட்டுமானப்பணியின் விபரங்கள் - வரைபடங்கள், அளவுக் குறிப்புக்கள், சுற்றாடல் முகாமைத்துவ திட்டங்கள் மற்றும் கணியப்பட்டியல் - ஆகியனவற்றில் விபரிக்கப்பட்டவாறு பொறிமுறை மற்றும் மின்னியல் வேலைகள் அடங்கலான சிவில் வேலைகளே ஆகும்.

   நிர்மாணக்காலப்பகுதியானது 180 நாட்களாகும். அவசரத் தேவைகள் மற்றும் பெசேவ நீங்கலாக ஒவ்வொன்றிற்குமான அண்ணளவான ஆகுசெலவு மதிப்பீடு 6.5 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   - கட்டிடங்கள் நிர்மாண விஷேடத்துவத்தில் சி-6 ஆம் தரத்தில் CIDA உடன் (முன்பு ICTAD என அழைக்கப்பட்டது) விலைமனுதாரர் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

4. கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட வருடாந்த சராசரி நிர்மாண வேலையின் பெறுமதி ஆகக் குறைந்தது 12 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

- இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக்கொடுப்பனவுகள் நீங்கலானதிரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது செயற்றிட்ட திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள கடன் வசதிகளின் ஆகக்குறைந்த தொகை 3 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவில்லாமல் இருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2019 நவம்பர் 28 ஆம் திகதி வரையும் வேலை நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். சாதாரண வேலை நேரங்களில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம். குறிப்பீடு செய்வதற்காக மாத்திரம் **www.escamp.lk** என்ற இணையதளத்தில் விலைமனுக்கோரல் ஆவணத்தின் மாதிரியொன்றை பார்வையிடலாம். (தொடர்பு தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு: 011-2888426/ 011- 2888427)

6. 2019 நவம்பர் 7 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் 28 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதிக்கும்

   மீளளிக்கப்படாத கட்டணமாக 1500 ரூபாவைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளருக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவின் பிரதியொன்றுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட கணக்காளரிடம் ரொக்கப் பணத்தில் இருத்தல் வேண்டும்.

7. விலைமனுதாரர் கட்டிடங்கள் நிர்மாணத்தில் விஷேடத்துவத்தில் சி-2 அல்லது மேற்பட்ட தரத்தில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள **CIDA** (முன்பு **ICTAD** என அழைக்கப்பட்டது) பதிவைக் கொண்டிருப்பதுடன் அவ்வாறான பதிவிற்கான அத்தாட்சியை விலைமனுவை சமர்ப்பிக்கும் வேளையில் முன்வைத்தல் வேண்டும். ஏற்றுக் கொள்ளக்கூடிய CIDA பதிவை சமர்ப்பிக்கத் தவறின், பதிலிறுக்கப்படவில்லை என கருதப்படும். ஒப்பந்தத்தை வழங்கும் போது விலைமனுதாரர் இற்றைவரையாக்கப்பட்ட மற்றும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, அவையிரண்டும் ஒரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு அதன் மேற்பகுதியில் ஒப்பந்த இலக்கம், நிர்மாணத் தலைப்பு அத்துடன் அமைவிடம் மற்றும் மாவட்டம் ஆகியன எழுதப்பட்டு 2019 நவம்பர் 29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் மாநாட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அதே இடத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

9. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான ''விலைமனுப்பிணையொன்றுடன்'' அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது அவசரத் தேவைகள் மற்றும் பெசேவ நீங்கலாக 75,000 இலங்கை ரூபாவாகும். விலைமனுப்பிணையானது 2020 மே 29 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

10. பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் 2019 நவம்பர் 22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் மேலதிக விபரங்கள் மற்றும் தளவிஜயம் தொடர்பாக அறிவிக்கப்படும்.

11. விலைமனுக்கள் 2020 ஏப்ரல் 29 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

12. விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஏ 3 படிவத்தையும் வழங்கல் வேண்டும்.

13. தளவிஜயங்கள் தொடர்பான ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்கள் அடங்கலான விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்களுக்கும் தொழில் வழங்குனர் பொறுப்பேற்க மாட்டார்.

14. பெற்றுக் கொள்ளப்பட்ட எந்தவொரு விலைமனுவையும் ஒன்றில் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான முழு உரிமையை செயற்றிட்ட பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது என்பதுடன் இது தொடர்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

இணைப்பு - 10 பீட் வன அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம்.

| தொடர் இல. | செயற்றிட்டப் பெயர் | மாவட்டம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | அவசரத் தேவைகள் மற்றும் பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (ரூபாவில்) | அவசரத் தேவைகள் மற்றும் பெசேவ நீங்கலாக வங்கி உத்தரவாதமொன்றான விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 1. | கப்புகொல்லேவவில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-107228-CW-RFQ) | அனுராதபுரம் மாவட்டம் | 1,500.00 | 6,500,000.00 | 75,000.00 |
| 2. | யக்காவெவயில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-107224-CW-RFQ) | அனுராதபுரம் மாவட்டம் | 1,500.00 | 6,500,000.00 | 75,000.00 |
| 3. | வஹல்கடயில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-107226-CW-RFQ) | அனுராதபுரம் மாவட்டம் | 1,500.00 | 6,500,000.00 | 75,000.00 |
| 4 | தமன்கடுவயில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-109887-CW-RFQ) | பொலன்னறுவ மாவட்டம் | 1,500.00 | 6,500,000.00 | 75,000.00 |
| 5 | லக்களயில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-109895-CW-RFQ) | மாத்தளை மாவட்டம் | 1,500.00 | 6,500,000.00 | 75,000.00 |
| 6. | வெலிஓயாவில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-106776-CW-RFQ) | முல்லைத்தீவு மாவட்டம் | 1,500.00 | 6,500,000.00 | 75,000.00 |
| 7. | துணுக்காயில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-109909-CW-RFQ) | முல்லைத்தீவு மாவட்டம் | 1,500.00 | 6,500,000.00 | 75,000.00 |
| 8. | கந்தளாயில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-109912-CW-RFQ) | திருகோணமலை மாவட்டம் | **1,500.00** | **6,500,000.00** | **75,000.00** |
| 9. | கொடகாவெலயில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-109886-CW-RFQ) | இரத்தினபுரி மாவட்டம் | **1,500.00** | **6,500,000.00** | **75,000.00** |
| 10. | தெனியாய, பிட்டபெத்தரயில் வன பீட் அலுவலர்களுக்கான விடுதிகளின் நிர்மாணம் (LK-ESCAMP-FD-109885-CW-RFQ) | மாத்தறை மாவட்டம் | **1,500.00** | **6,500,000.00** | **75,000.00** |

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**''சம்பத்பாய'', இல. 82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.**
**தொலைபேசி இல.: 0112888426 / 0112888427**
**www.escamp.lk**